RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI: 10.34256/irjt2224s-22235

OPEN ACCESS

# சங்க இலக்கியத்தில் வழிபாட்டு மரபுகள்

மோ. செளந்தர்ராஜன் [அ, *]

[அ] தமிழ்த்துறை, பூ சா கோ கலை அறிவியல் கல்லூரி, கோயம்புத்தூர்-641014, தமிழ்நாடு, இந்தியா

# Liturgical Traditions in Sangam Literature

**M. Soundarrajan [a, *]**

[a] Department of Tamil, PSG College of Arts & Science, Coimbatore-641014, Tamil Nadu, India

* Corresponding Author: sivasoundarrajan007@gmail.com

Received: 27.09.2022
Revised: 01-11-2022
Accepted: 06-11-2022
Published: 01-12-2022

Check for updates

**ABSTRACT**

Tamil language is called the language of devotion. Worship is a part of devotion. From the verb 'worship' the noun 'worship' is derived. Worship is the act of kindness that everyone carries out with the remembrance of God, companionship of the learned, and benevolence for the well-being of all living beings. In prehistoric times water, fire, wind, thunder, lightning etc. were worshiped as God because it has some kind of power. There is much evidence of the presence of Shiva lingam and Shiva worship in the Indus Valley Civilization, which is believed to have existed between 2500 BC and 1500 BC. The clay figures, god forms of Lingam and Durga found at Mohanjataro and Arappa bear witness to the antiquity of Shiva worship. Evidence of the antiquity of Muruga worship has been found in excavations at Adichanallur, believed to date back to the twelfth century BC. Tolkappiyam describes well about the Kotravai worship and Muruga worship. This article examines the liturgical traditions found in Sangam Literature.

**Keywords:** Sangam Literature, Kotravai worship, Murugan worship, Shivan worship

## முன்னுரை

பக்தியின் முதற்பகுதி வழிபாடு. 'வழிபடு' என்ற சொல்லே காலப்போக்கில் வழிபாடு என்ற மாற்றம் பெற்றுள்ளது. 'படு' என்னும் சொல் முதலில் நீண்டு 'பாடு' என்றாயிற்று. திருவருள் கைவந்த தவத்தோர் சென்ற வழியிலே அத்தவத்தோரைப் பின்பற்றிச் செல்வதே வழிபாடாகும். வழிபாடு எனினும் பூசை எனினும் ஒன்றாகும். கடவுள் பூசை, குரு பூசை, பெரியோர் பூசை, பெற்றோர் பூசை முதலியவற்றையே சிலர் வழிபாடு எனக் கருதுகின்றனர். ஆனால் இவைமட்டுமல்லாது நாம் செய்யும் எல்லாச் செயலும் முறைவழுவாது செய்யப்படின் அவையும் வழிபாடாகும்.

முறைமையிற் செய்தல் என்பது ஒவ்வொருவரும் அகம், புறம் தூயராய்க் கடவுள் நினைவும், கற்றோர் துணையும், நற்சார்பும் கைக்கொண்டு அனைத்துயிர்க்கும் நலம் பயக்கும் அன்பருள் கலந்த இன்செயல்களே வழிபாடு எனப்படும் (Sanmugampillai, 1996).

முதன்முதலில் மனிதன் வழிபட்டவை இயற்கையையே ஆகும். தன்னால் மனித சக்தியால் அறிந்துகொள்ள முடியாத அன்றையக் காலகட்டத்தில் நிகழ்ந்த இயற்கைச் சீற்றங்களான இடி, மின்னல், மழை, புயல் இவற்றைக் கண்டு அச்சப்பட்டு, தன்னை அதிலிருந்து காப்பாற்றிக் கொள்ள அவற்றை வணங்கி வழிபடத் தொடங்கினான். இவற்றிலிருந்துதான் வழிபாடு தொடங்குகிறது. அதன்பிறகு நிலம், நீர், காற்று, மரம், சூரியன், ஆகாயம் என அனைத்தையும் கண்டு மனித சக்திக்கு

மீறிய சக்தி இயற்கைக்கு உண்டு என நம்பினான். அதனால் அவற்றையே கடவுளாகவும் கருதி வழிபட்டான். இவ்வாறு இயக்கை வழிபாடானது தோற்றம் பெற்றுள்ளது.

## வழிபாடு - விளக்கம்

வழிபாடு என்ற சொல்லுக்குத் தமிழ்மொழி அகராதி வணக்கம், வழிபடல், ஆராதனை, தாழ்மை, அப்பியாசம் என்னும் பொருட்களை தருகின்றது (ப.1261). தமிழ் லெக்சிகன் அகராதி பின்பற்றுதல், வணங்குதல் எனப் பொருள் தருகின்றது (ப.539). மெய்யப்பன் தழிழ் அகராதி வழியிற் செல்லுகை, பூசனை, சமயக்கோட்பாடு, வழக்கம் எனப் பொருள் தருகின்றது (ப.1045). மற்ற பிற அகராதிகளும் வழிபாடு என்ற சொல்லுக்கு மேற்கூறிய பொருட்களை தருகின்றன.

## வழிபாடு தோன்றக்காரணம்

"இயற்கையின் ஆற்றலைக் கண்டு அஞ்சிய மனிதன் அதன் சீற்றத்திற்கு ஆளாகாமல் இருக்க விரும்பினான். இதன் அடிப்படையில் தான் வழிபாடுகள் தோன்றின" என்று சக்திவேல் கூறுகிறார் (Sakthivel, 2014).

"இயற்கையிடமும் மரணத்திற்குப் பின்வரும் நிலையிடமும் மனிதன் கொண்ட அச்சமே வழிபாட்டின் அடிப்படைக் காரணம்" என்று கூறுகிறார் சிக்மண்ட் பிராய்டு. "மனிதனுக்கு இயற்கைப் பொருள்மீது ஏற்பட்ட வியப்பு, அதிர்ச்சி, அச்சம் என்னும் உள்ளத்து உணர்வுகளே சமயம் தோன்றக் காரணமாயின" என்கிறார் மார்க்ஸ் முல்லர். ஹெர்பர்ட் ஸ்பென்சர் "இறந்தவர்களை நினைவுகூறும் முன்னோர் வழிபாட்டிலிருந்து தான் முதன் முதலில் சமயம் தோன்றியது" என்கிறார். "மந்திரம் பற்றிய தொல்குடியின் சிந்தனையிலிருந்தே சமயம் தோன்றியது" என்கிறார். சர். ஜேம்ஸ் பிரேசர். ஆண்ரூ லாங் "உயர்கடவுள் ஒருவனே மனித வாழ்வைத் தோற்றிவித்தான் என்று எண்ணியதால் மனித குலத்தில் சமயம் தோன்றியது" என்கிறார்.

சிந்து வெளியில் வாழ்ந்த மக்கள் வழிபட்ட தெய்வங்களாக முதற்கண் தாய்தெய்வத்தையும் அடுத்தபடியாக மும்முகமுடைய கடவுளையும் மூன்றாவதாகச் சிவலிங்கத்தையும் சர் ஜான் மார்ஷல் என்பார் முறைப்படுத்திக் கூறியுள்ளார் (Vellaivaarananaar, 2022).

"இயற்கைப் பொருட்களிலும் பௌதிகப் பொருட்களிலும் உறைந்துள்ள ஆவிகள் ஆற்றல் மிகுந்தவை: அவையே மனித வாழ்வுக்குக் காரணமாக அமைகின்றன எனத் தொல்பழங்கால மக்கள் நம்பி ஆவிகளை வழிபட்டனர். இந்த ஆவி வழிபாடே சமயத்தின் தோற்றுவாய்" (ஆ.மகாலெட்சுமி,2014) என இங்கிலாந்து நாட்டு மானிடவியலறிஞர் எட்வர்டு பர்னட் டைலர் முன்மொழிந்தார்.

ஆஸ்திரேலிய முதுகுடிகளிடம் ஆய்வு செய்த எமில் துர்க்ஹைம் இவர்களின் குலக்குறி முறைகளை நுட்பமாக ஆராய்ந்த பின்னர் சமயத்தின் தோற்றம் குலக்குறி முறையிலிருந்தே தோன்றியது என்கிறார்.

திருஎன். வேங்கடரமணய்யா தென் இந்தியக் கோயில்களின் தோற்றம் எனுந் தலைப்பில் எழுதியுள்ள கட்டுரையில் "இறந்தோரைப் புதைத்து அதன்மேல் வைக்கப்படும் கற்களே காலப்போக்கில் வழிபாட்டுக் கற்களாகவும், கோயில்களாகவும் வளர்ச்சி பெற்றுள்ளன" (ஆ.மகாலெட்சுமி,2014)என்கிறார். இவ்வாறு வழிபாடு பற்றிப் பல்வேறு அறிஞர்கள் பல்வேறுக் கருத்துக்களை வெளிப்படுத்தினாலும் வழிபாடானது தொடர்ந்து வளர்ந்துவந்துள்ளதையும், வழிபடும் பொருள் மாறுபடினும் வழிபாடானது நிகழ்ந்துள்ளதையும் அறியமுடிகிறது.

## நற்றாய் வழிபாடு

குடும்ப வாழ்க்கையில் துன்பம் நேர்கின்றபொழுது இறைவனை வணங்குதல் அன்றுமுதல் இன்றுவரை இருந்துவருகிற நம்பிக்கையாகும். அந்தவகையில் நற்றாய் தன் மகள் தலைவனோடு உடன்போக்குச் சென்ற காலத்தில் மகளின் பிரிவினால் வருந்தித் தெய்வத்திடம் புலம்புவதை,

"தன்னும் அவனும் அவளும் சுட்டி

மன்னும் நிமித்தம் மொழிப்பொருள் தெய்வம்

நன்மை தீமை அச்சம் சார்தல் என்று

அன்ன பிறவும் அவற்றொடு தொகைஇ

முன்னிய காலம் மூன்றுடன் விளக்கித்

தோழி தேஎத்தும் கண்டோர் பாங்கினும்

போகிய திறத்து நற்றாய் புலம்பலும்

ஆகிய கிளவியும் அவ்வழி உரிய" (Ilankumaranar, 2018)

என்ற நூற்பா எடுத்துரைக்கிறது. இதில் உடன்போக்குச் செல்வதற்கு முன் தலைவி சிறப்பாக வாழ்ந்தாள். இப்பொழுது தலைவனுடன் உடன்போக்கு செல்கின்ற வழியானது எப்படிப்பட்டதோ, அவள் மகிழ்ச்சியாக இருக்கிறாளா, துன்பப்படுகிறாளா அல்லது என்னசெய்து கொண்டிருப்பாள் என தலைவியின் தோழியைப் பார்த்தும், கண்டோரை நோக்கியும், தெய்வத்தை நினைத்தும் புலம்புவதாக நற்றாய் வழிபாடானது அமைகிறது.

## நானில மக்களின் வழிபாடு

காடுறையுலகமாகிய முல்லைநிலத்துக் கோவலர் தம்மால் மேய்க்கப்பெறும் ஆனிரைகள் நோயின்றி வளர்ந்து பயன் தருதல் வேண்டிக் காயாம் பூ வண்ணனாகிய மாயோனைப் பரவிக் குரவைக் கூத்தாடுதலும், மைவரை உலகமாகிய குறிஞ்சி நிலத்து குறவர்கள் மலரின் உள்ளிருந்தெழும் நறுமணம் போன்று உயிர்க்குயிராய் விளங்குந் தெய்வமான வெறியினையறியுஞ் சிறப்புடைய வேலனை அழைத்து வெறியாடல் நிகழ்த்திச் செங்காந்தள் நிற வண்ணனாகிய செவ்வேளை வழிபடுதலும், மருதநிலத்து வாழும் உழவர்கள் முறைசெய்து காப்பாற்றும் இறைவனென மலர்தலையுலகிற்கு உயிரெனச் சிறந்த வேந்தனை வழிபடுதலும், நெய்தல் நிலத்து பரதவர் தமது வலைவளஞ் சிறத்தல் வேண்டிக் கடல் தெய்வமான வருணனை வழிபடுதலும் பண்டைய நாளில் தமிழகத்து நானில மக்கள் மேற்கொண்டொழுகிய தெய்வ வழிபாடுகளாகும். இவ்வழிபாடுகளோடு அச்சத்தை அகற்றி வெற்றியைத் தரும் கொற்றவையாகிய பழையோள் வழிபாடும் தறுகண்மைமிக்க தமிழ் மறவர்களால் மேற்கொள்ளப்பெற்றதை,

"வெறிஅறி சிறப்பின் வெவ்வாய் வேலன்

வெறியாட்டு அயர்ந்த காந்தளும், உறுபகை

வேந்துஇடை தெரிதல் வேண்டி ஏந்துபுகழ்ப்

போந்தை வேம்பே ஆர்என வரூஉம்

மாயோன் மேய மன்பெருஞ் சிறப்பின்

தாவா விழுப்புகழ்ப் பூவை நிலையும்" (Ilankumaranar, 2018)

எனும் நூற்பா எடுத்தியம்புகிறது. குறிஞ்சிநிலத் தெய்வமாகக் கொண்டு போற்றப்பெறும் முருகவேள் வழிபாட்டின் சிறப்பினை அம்முதல்வனை வழிபடும் வேலன்மேல் ஏற்றி 'வெறியாட்டு அயர்ந்த காந்தள்' என்ற தொடராலும், காயாமலர் வண்ணனாகிய மாயோனது காத்தல் சிறப்பினை 'மாயோன் மேய மன்பெருஞ் சிறப்பின் தாவா விழுப்புகழ்ப் பூவைநிலை' என்ற தொடராலும், கொற்றவை வழிபாட்டின் பயனாகப் போர்மறவர்க்குணவாகும் தறுகண் உணர்வினைச் 'சிறந்த கொற்றவை நிலை' என்ற தொடராலும் தொல்காப்பியர் சிறப்பாக எடுத்துக்கூறியுள்ளார்.

## வெறியாட்டு

முருகனை வழிபட்டும், அவன் வடிவங்களையும் கொண்டிருப்பவன் வேலன் எனப்பட்டான். அவனைக் கொண்டு முருகனுக்கு வழிபாடு செய்வித்துத் தன் மகளின் வேறுபாடு எதனாலாயிற்று எனச் செவிலி வினவி நிற்பாள். இதனையே பண்டையத் தமிழர் வெறியாட்டு என அழைத்தனர். வேலன் வெறியாட்டிற்குக் களத்தினை அமைத்து முருகனுடைய வேலிற்கு மாலை சூட்டி, வளம் பொருந்திய வீட்டில் ஒலியுண்டாக முருகனைப் பாடி பலியினைக் கொடுத்தும் அழகிய சிவந்த தினையினைக் குருதியுடன் கலந்து தூவி முருகனை வரும்படி அழைத்ததை,

"களம் நன்கு இழைத்து, கண்ணி சூட்டி

வளநகர் சிலம்பப்பாடி, பலி கொடுத்து

உருவச் செந்தினை குருதியொடுதூஉய்

முருகு ஆற்றுப்படுத்த உருகெழு நடு நாள்" (Jeyabal, 2011)

என்ற பாடல் அடிகள் எடுத்துரைக்கின்றன. மேலும், தலைவனுடைய நற்பண்புகளை நினைத்து வருந்தியதால்தான் அவள் உடல் வற்றி மெலிவுற்றது என்பதை அறியாத நற்றாய் அதற்கான காரணம் அறிதல் வேண்டி வெறியாட்டு எடுத்தலையும் அதற்கு ஆட்டுக்குட்டியை பலியாக இடுதலை,

"அறியா வேலற்தரிஇ அன்னை

வெறிஅயர் வியன்களம் பொலிய ஏத்தி

மறிஉயிர் வழங்கா அளவை சென்றுயாம்" (Jeyabal, 2011)

என்ற பாடல் அடிகள் வழி அறியமுடிகிறது.

## குறமகளின் வெறியாட்டு

வெறியாட்டு என்பது ஆண்கள் மட்டுமின்றி பெண்களும் வெறியாட்டு நிகழ்த்தியுள்ளனர். தெய்வமாடும் குறப்பெண் நெய்யையும் வெண்சிறுகடுகையும் அப்பித் தான் வழிபடுவதற்குரிய மூல மந்திரத்தை மறைவாக ஓதி வழிபட்டு மலர்களைத்தூவி குனிந்து கைகூப்பி வணங்கி, வெவ்வேறு நிறத்தை உடைய இரண்டு ஆடைகளை உடுத்தி, வெண்பொரி தூவி, வாசலில் செந்நிறமுடைய மலர்களால் தொடுக்கப்பட்ட மாலையையும், ஏனைய மலர்களால் தொடுக்கப்பட்ட மாலைகளையும் கட்டித் தொங்கவிட்டு, பலிகொடுத்த கிடாயினது குருதியோடு பிசைந்த தூய வெள்ளரிசியைச் சிறு பலியாக இட்டுப் பலியிடத்தில் வைத்து நறிய சந்தனம் ஆகியவற்றைத் தெளித்து வழிபாடு செய்தாள் என்பதை,

"நெய்யோடு ஐயவி அப்பி, ஐது உரைத்து

குடந்தம் பட்டு, கொழுமலர் சிதறி,

முரண்கொள் உருவின் இரண்டு உடன் உடீஇ

நறும்புகை எடுத்து, குறிஞ்சி பாடி" (Mohan, 2011)

என்ற பாடல் அடிகள் விளக்கிநிற்கின்றன. பண்டையத் தமிழர்கள் இல்லங்களில் தெய்வத்தன்மை விளங்கவும் பேய் முதலிய தீய சக்திகள் உள்ளே புகாதவாறு மனையெங்கும் வெண்சிறுகடுகை நெய்யோடு கலந்து அப்பிவைத்து அவர்களைப் பாதுகாத்துக் கொண்ட முறையினையும் அறியமுடிகிறது.

சிலப்பதிகாரத்திலும் வெறியாட்டு இடம்பெற்றுள்ளது. தலைவியின் நோய்க்கு காரணமாகிய தலைவனை விட்டுவிட்டு வேலனை (பூசாரியை) அழைத்து வெறியாட்டு நிகழ்த்துவது மடத்தனம் என்றும் அதனைநிகழ்த்தும் பூசாரி ஒரு மடையன் என்றும் அப்பூசாரிமேல் வேலன் வந்தால் (இறைவன்) அவனும் மடவன் என்று சொல்வதாக,

"நேர் இழை நல்லாய்! நகையாம் மலைநாடன்

மார்பு தரு வெம்நோய் தீர்க்க வரும் வேலன்

தீர்க்க வரும் வேலன் தன்னிலும் தான் மடவன்" (Subramaniyam, 2015)

அமைகிறது. சமய வேறுபாட்டால்தான் மடவன் என்னும் சொல் இடம்பெற்றிருக்கிறது. இருப்பினும் தொல்காப்பியம், சங்கஇலக்கியம் தொடர்ந்து காப்பியக்காலம் வரையிலும் வெறியாட்டு நிகழ்வு நடைபெற்றுவந்துள்ளதை மேற்கூறிய பாடலின் வாயிலாகக் காணமுடிகிறது.

## நடுகல் வழிபாடு

தொல்காப்பியம் நடுகல் வழிபாடுகள் பற்றியும் போர்க்களத்தில் மறப்போர் செய்து வீழ்ந்துபட்ட வீரர்களுக்கு நடுகல் வைத்து வழிபட்டதையும் தொல்காப்பியம்,

"காட்சி, கால்கோள், நீர்படை, நடுகல்

சீர்த்தகு சிறப்பின் பெரும்படை வாழத்தல் என்று

இருமூன்று வகையில் கல்லொடு புணரச்

சொல்லப் பட்ட எழுமூன்று துறைத்தே" (Ilankumaranar, 2018)

என்ற நூற்பாவின் வழி நடுகல்லுக்கு உரியனவாகக் காட்சி, கால்கோள், நீர்ப்படை, நடுகல், பெரும்படை, வாழ்த்தல் என்ற ஆறுதுறைகளின் வழியாக பேசப்படுகின்றன. எனவே போரில் நெஞ்சில் விழுப்புண் பட்டு இறந்த வீரனுக்கும், புகழோடு ஆட்சி செலுத்தி மறைந்த மன்னனுக்கும் நடுகல் நட்டு வழிபடப்பட்டதை நடுகல் வழிபாடு எடுத்துரைக்கிறது.

தன்ஊர் பசுக்கூட்டங்களைக் கவர்ந்து சென்ற வீரர்களுடன் போர் புரிந்து அவற்றை மீட்டுப் போரில் வீரமடைந்த மறவனுக்கு அங்கு நடுகல் நட்டப்பட்டுள்ளதாம். தலைவன் இறந்தபிறகு தலைவி தலைவன் இல்லாததால் தலைமயிற் மொட்டையடிக்கப்பட்டும், கைம்மை நோன்புடனும், அணிகலன் நீங்கப்பெற்ற அவளது நிலையை,

"நிரைஇவன் தந்து, நடுகல் ஆகிய

வென்வேல் விடலை இன்மையின் புலம்பி" (Parimanam & Balasubramaniyam, 2014)

எனும் பாடல் அடிகளும் மேலும், பசுக்களை மீட்டு வந்த தலைவனை வெட்சி வீரர்கள் அம்பெய்து கொன்றனர். அவன் நடுகல்லாயினான். அத்தலைவனின் புகழைப் பரப்பக் கற்களைப் பரப்பி ஒரு கல்லில் அவனது பெயரையும் வீரத்தையும் பொறித்து அதனை நட்டு அதன்மேல் மாலை சூட்டி, சுற்றத்தோடு வழிபட்டனர் என்பதை,

"அணிமயிற் பீலி சூட்டி, பெயர் பொறித்து

இனி நட்டனரே, கல்லும்" (Parimanam & Balasubramaniyam, 2014)

இத்தகைய சிறப்புடைய நடுகல்லிற்குப் பலிகொடுத்தும் வழிபட்டுள்ளனர். நடுகல்லிற்கு மயில் தோகையைச் சூட்டி, துடி எனும் இசைக்கருவி முழங்கி நெல்லால் ஆக்கிய கள்ளோடு செம்மறிக் (ஆட்டுக்குட்டி) குட்டியைப் பலிகொடுத்து வழிபட்டதை,

"நடுகல் பீலி சூட்டி துடிப்படுத்து

தோப்பிக் கள்ளொடு துரூஉப் பலி கொடுக்கும் (Jeyabal, 1996)

என்ற அடிகள் உணர்த்துகின்றன. நடுகல்லின் முன் வேல் நட்டப்பட்டு இருப்பதும் அதனோடு கேடயம் இருப்பதையும் அவ்வழியாக கடந்துசெல்லும் தலைவன் தலைவி அதனை வழிபட்டுச் செல்வதையும் அகநானூறு (பாடல் 131) விளக்குகிறது.

நடுகல்லைச் சுற்றிக் கேடயத்தை வேலிபோல அமைத்தலையும் அதனைத் தாங்குவதற்கு அவ்விடத்தைச் சுற்றி வேல்கள் நிறுத்தப்பெறுவதையும், நடுகல்லில் தெய்வமாக விளங்குபவன் தம்குடிக்குக் காவலாக இருப்பான் என்ற நம்பிக்கையே நடுகல் வழிபாட்டின் வளர்ச்சி என்பதை "நடுகல்லின் அரன்போல" என்று பட்டினப்பாலை விளக்குகிறது (பாடல் 79).

## முடிவுரை

கடவுளையே கடவுள் உருவங்கொண்டவர்களையோ முகம்மலர்ந்து நோக்கி, வாயராப் புகழ்ந்து, வாழ்த்தி, கையை தலைமேல் குவித்துத் தொழுது வணங்கவேண்டும் என்பதை திருமுருகாற்றுபடை எடுத்தியம்புகிறது. பண்டையகாலம் முதல் இக்காலம் வரை வழிபாடுகள் வளர்ந்து வருகின்றன என்பதற்கு மக்கள் கொண்டாடும் விழாக்கள் சான்றாகத் திகழ்கின்றது. சங்ககாலத்தில் விழாக்கள் நிறைந்த ஊராக உறையூர் திகழ்ந்ததை அகநானூறு வழி நின்று விளக்குகிறது. தமிழருடைய நடுகல் வழிபாடு முதலியவற்றையும் நோக்கும்போது முன்னோர் வழிபாடு தமிழரிடம் இருந்த மூத்த வழிபாடாகத் தோன்றுகிறது. இவ்வழிபாட்டின் பல்வேறு கிளைகளாகப் புதுப்புது வழிபாடுகள் அவ்வப்பொழுது இருந்த குழுக்களின் வலிமைக்கு ஏற்பத் தோன்றின. தமிழர் வழிபாடுகள் காலத்திற்கேற்ப சிலமாற்றங்கள் பெற்றாலும் அவை முற்றிலும் அழிந்துவிடாமல் காலச்சூழலுக்கேற்ப தன்னை வலுப்படுத்திக்கொண்டு நிலைத்துநிற்கின்றன. மக்களின் வாழ்வியலோடு வழிபாடுகளும் வளர்ந்து வருகின்றன. காலப்போக்கில் தமிழகத்தில் பரிணமித்த சிவ வழிபாடும், திருமால் வழிபாடும் தமிழகத்தில் இருந்த பல்வேறு வழிபாடுகளை ஒன்றாக இணைக்கும் முயற்சியாக அமைந்தது எனலாம்.

## References


Ilankumaranar, U.A. (2018) Tolkappiyam – Thelivurai, Fourth Tamil Sangam, Madurai, India

Jeyabal, R. (2011) Agananooru Moolamum Uraiyum, New Century Book House, Chennai, India

Mohan, R. (2011) Pathupatu Molamum Uraiyum, New Century Book House, Chennai, India

Parimanam, A.M., Balasubramaniyam, K.V. (2014) Purananooru Moolamum Uraiyum, New Century Book House, Chennai, India

Sakthivel, S. (2014) Nattupura Eyal AIvu, Manivasagar Pathippagam, Chennai, India

Sanmugampillai, M. (1996) Sangathtamilarin Valipadukalum Sadankukalum, International Institute of Tamil Studies, Chennai, India

Subramaniyam, S.V. (2015) Silappathikaram, Gangai Puthaga Nilayam, Chennai, India

Vellaivaarananaar, K. (2002) Saiva Sithandha Sarithira Varalaru, Tamil University Publication, Tanjavur, India



**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.


**About the License:**


Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License